1973 ஆகஸ்ட் 11]

கோடிக்கணக்கான ரூபாய்களைப் போட்டுவிட்டு, அம்போ என்ற நிலையில் இருக்கும் என்னைப்போன்ற புரொட்யூசர்களுக்கு அவைகளைக் கொடுத்தால் வசதியாக இருக்கும். தமிழ்நாட்டில் ஒரு ' ஹாலிவுட்டை ' உண்டாக்கினல் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, திரைப்பட உற்பத்தியாளர்களுடைய மனக்குறையைக் கேட்டீர்கள். அவர்கள் படம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு லைட் பாய்ஸ் போன்றவர்களின் தயவு தேவை என்று கருதுகிறேன். லைட் பாய்ஸ் மற்றும் அங்குள்ள எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கருதினலும், இயக்குநர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டார்கள். கோடம்பாக்கத்திலேயே, காலஞ்சென்ற நடிகர்களின் நிலங்களையும் வாங்கி அந்த இடத்திலே வீடு கட்டித் தாருங்கள் என்று கோரினார்கள். அது அவர்களுடைய தொழிலுக்கும் பக்கமாக இருப்பதால் அந்த மனைகள் வாங்கப்பட்டு வீடுகள் கட்டப்படுகின்றன. அவர்களிலே எல்லா இயக்குநர்களும், பலர் கருதிக்கொண்டு இருப்பதைப்போல பல படங்களைத் தயாரிப்பவர்கள் இல்லை. அவ்வப்போது சான்ஸ் கிடைக்கும்பொழுது மட்டும் தயாரிப்பவர்கள். அவர்கள் அதிக வருவாய் உடையவர்கள் அல்லர்.

உற்பத்தியாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். கொரட்டூரில் 81,000 ரூபாய்க்கு, 71,000 ரூபாய்க்கு பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. திரு. செழியன் அவர்கள் முன்பே விரும்பியிருக்க வேண்டும். காலங்கடந்து விரும்பியிருக்கிறார்கள். அடுத்த திட்டத்தில், அவர்கள் விரும்பினல் உற்பத்தியாளர்களுக்கும், இலட்சக்கணக்கான விலை மதிப்புள்ள வீட்டு மனைகளை அதற்கான மொத்தத் தொகையையும் கொடுத்தால்—மொத்தத் தொகையையும் கொடுக்க வேண்டும்—வீடுகளைக் கட்டித் தரத் தயாராக இருக்கிறது.

சென்னை—தாமரைப்பாக்கம் பேருந்து வழித்தடம்

*** 95 வின—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், தாமரைப்பாக்கம் இணைப்புச் சாலைக்கு. சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து புதிய பேருந்துகள் விடும் திட்டத்தினை விரைந்து நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) இது எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) : தாமரைப்பாக்கம் இணைப்புச் சாலைக்கு நாள் ஒன்றுக்கு 10 வழித் தடங்களில் 15 பேருந்துகள் 68 தடவைகள் செல்கின்ற காரணத்தால், பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு எவ்வித நியாயமுமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, 68 தடவைகள் தாமரைப் பாக்கத்திற்கு இந்தப் பேருந்துகள் சென்றாலும், அங்கு நெரிசல் அதிகமாக இருப்பதால் தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலைக்கு என்று தனிப் பேருந்துகளை சென்னையிலேயிருந்து விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் அளவில் பேருந்து வசதிகள் இல்லை.

தங்கசாலை—போந்தவாக்கம் பேருந்து வழித்தடம்

* 96 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தங்கசாலைக்கும் போந்தவாக்கத்திற்குமிடையே ஈகுவார் பாளையம் வழியாகச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து நிறுத்தப்பட் டுள்ளதால் இவ்வழித் தடத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1—6—1973 முதல் சென்னையி லிருந்து (பேசின் பிரிட்ஜிலிருந்து) கும்மிடிபூண்டி, ஈகுவார்பாளையம் வழி யாகப் போந்தவாக்கத்திற்குப் புதிய வழித்தடத்தில் பேருந்து விடப்பட் டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தப் பேருந்தை 1-6-1973 முதல் விட்டதற்கு நன்றி சொல்லும் நேரத்தில், அதில் நெரிசல் அதிகமாக இருப்பதால் வேறொரு பேருந்தையும் அதற்கு இணையாக விடுவதற்கு அரசு முன்வருமா ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, there is no such proposal at present.